தி. மு. கழகத்திற்கு ஆச்சாரியார் பாராட்டு

Phone: No. 4502 Regd: No. M. 5458

விலை முக்காலணா இலங்கை 8 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 29—1—51 | மணி 56

திருவையாற்றில் ஆச்சாரியாருக்குக் கருப்புக்கொடி வரவேற்பு

..................(ஃ)..................

மக்களின் பேருணர்ச்சி வெறுப்பைக் காட்டுவதில் முழுவெற்றி

சென்னை, ஜன. 29—

திருவையாற்றில் தியாகய்யர் 104-வது ஆண்டு விழாவைத் துவக்கி வைக்க, மத்திய அரசாங்க உள்நாட்டிலாக்கா அமைச்சர் தோழர் இராஜகோபாலாச்சாரியார் தஞ்சைக்கு வந்தார்.

திருவையாற்றுக்கு விழாவைத் துவக்கி வைக்க வந்த சமயத்தில் தி. மு கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்காக ஒழுங்காக இருமருங்கிலும் நின்று கருப்புக்கொடி காட்டி, வடநாட்டுஅமைச்சியலிலும், அரசியலிலும், வடநாட்டு அரசாங்கம் தென்னாட்டைச் சுரண்டுவதிலும் தங்களுக்குள்ள வெறுப்பை நன்கெடுத்துக்காட்டினர்.

தி. மு. கழகக் கூட்டத்தார் தங்கள் வெறுப்புணர்ச்சியை மிக அமைதியான முறையில் எடுத்துக் காட்டியதற்காக மகிழ்ந்து பாராட்டுவதாக ஆச்சாரியார் கூறினர்.

திராவிட முன்னேற்றக் கழக தீர்மானப்படி டில்லி அமைச்சர் ஆச்சாரியார் திருவையாறில் நடைபெறும் தியாகப் பிரம்ம விழாவை ஆரம்பித்து வைப்பதற்காக வந்திருந்தார். இவர் வருகையை அறிந்த மக்கள் ஆயிரக்கணக்கில் கூடி அமைதியாகக் கருப்புக்கொடி காட்டினர். கருப்புக் கொடி வரவேற்பைக் கழக முக்கியஸ்தர்கள் முன்னின்று நமக்கு வெற்றியைத் தேடித்தந்தனர். ஆச்சாரியார் வருகைக்கு முன் ஜில்லா போலீஸ்அதிகாரிகள் வரும் பாதைகளை அசம்பாவிதம் ஒன்றும் நேராமல் பாதுகாக்கப்பலமான போலீஸ் பாதுகாப்புகள் செய்திருந்தனர். கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கடமையை உணர்ந்து மிக அமைதியான முறையில் கருப்புக்கொடி பிடித்தனர். பொது மக்களும் இதில் பெருவாரியாகக்கலந்து கொண்டதுபாராட்டத்தக்கது. சென்னை,குன்றத்தூர் முதலிய இடங்களில் நடத்திய ஆட்சியாளர்களின் அவசரத் தன்மை ஒன்றும் ஏற்படாதது பாராட்டக் கூடியதாகவும் இருந்தது.

ஆச்சாரியார் வைபவ ஆரம்பப் பேச்சில் கருப்புக்கொடியைப் பற்றி சிறிது நேரம் பேசினர். அவர் பேசும்போது தி. மு. கழக உறுப்பினர்கள் மிகவும் அமைதியான முறையில் நடந்துகொண்டதைப் பாராட்டிப் பேசினர்.

மற்றும்ஆச்சாரியார்பேசும்போது தாம் தாய்நாட்டுக்குவருவதாகவும், தம்மைத் திரும்பிப்போ என்று கூறுவதைக்கண்டு ஆச்சரியப்படுவதாகவும்,வெளியேற்றப்படவேண்டியவர் வெளியேறிவிட்டதாகவும் குறிப்பிட்டது பொறுத்தமற்றதாகவே இருந்தது. ஆச்சாரியார் தனி ஒதாவில் தென்னாட்டுக்கு வரவில்லை என்பதை அவர் மறந்துவிட்டார் போலும். ஆச்சாரியார் வெறும் ஆச்சாரியார் அல்ல. திராவிடநாட்டைச் சுரண்டும் வடநாட்டு ஏகாதிபத்தியபீடத்தின் அச்சிவோன அமைச்சர் என்ற முறையில் இம்முறை வந்ததற்காகவே தி மு. கழகம் அவரைக் கருப்புக் கொடியுடன் வரவேற்றார்கள் என்பதைமட்டும் ஞாபகமூட்டிக் கொள்ளவேண்டியதாக இருக்கிறது. ஆகவே தி மு. கழகம் தனிப்பட்டஎவர்மீதும்வெறுப்போ பகைமையோ கொண்டு கருப்புக் கொடி பிடிப்பதில்லை. இதை நமது

4-ம் பக்கம் பார்க்க

முதலாளிகளின் ஏதேச்சதிகாரம்

————(o)————

காரணமின்றி பழிவாங்கும் போக்கு மாறவேண்டும்

————(o)————

தோழர் வி. சக்கரைச் செட்டியார் கண்டனம்

சென்னை, ஜன. 28—

அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் தலைவர் தோழர் வி. சக்கரைச் செட்டியார், சென்னை தாம்ஸன் அச்சுக் கூடத்தில் 18 தொழிலாளிகள் பழிவாங்கப்பட்டதைப்பற்றி கீழ்க்கண்ட அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கிறார்.

நீண்ட காலமாக வேலை செய்து வரும் மதிப்புப்பெற்ற கம்பெனியுமாகிய தாம்ஸன் கம்பெனி தொழிலாளிகளைப் பழி வாங்குவதின் மூலம்தான் தோன்றித்தனமாகவும் அநியாயமாகவும் நடந்துகொண்டது வியப்பை அளிக்கக் கூடியதாக யிருக்கிறது.

18-தொழிலாளிகள் பல ஆண்டுகளாக அந்தக் கம்பெனியில் ஊழியம் புரிந்துவந்தனர். 4 முதல் 10 ஆண்டுவரை சர்வீஸ் செய்துள்ள அந்தத் தொழிலாளிகள் இப்பொழுது டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளனர். சரியாக சொல்லப்போனல், 16-2-50 ல் அவர்கள் வேலையினின்றும் தள்ளப்பட்டிருக்கின்றனர். அவர்களின்மேல் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பற்றி எந்தவிதமான விசாரணையும் கிடையாது. அத்தொழிலாளிகள் தொழிற்சங்க வேலைகளில் பங்கெடுத்துக்கொண்டார்கள் என்பவைபோன்ற அர்த்தமற்ற குற்றச்சாட்டுகளே அவை. இவை சம்பந்தமாக எவ்வித விளக்கமும் தொழிலாளிகளிடம் கேட்கப்படவில்லை. தொழிலாளிகளின் பதிலையும் மானேஜ்மெண்டார் எதிர்பார்க்கவில்லை. முன்னெச்சரிக்கையாகக் கொடுக்கப்பட வேண்டிய நோட்டீசுமின்றி அவர்கள் வேலையை விட்டுத் தள்ளப் ட்டுள்ளனர்.

இது மிகவும் அநியாயமான நடவடிக்கையாதலால், லேபர் டிபார்ட்மெண்ட் இதில் தலையிட வேண்டுமென்று சென்னை மாகாணத் தொழிற் சங்க காங்கிரஸ் கோரியது. ஆனல், லேபர் கமிஷனர் மானேஜ்மெண்டின் வார்த்தையைக் கேட்டுவிட்டு, அத்தொழிலாளிகளின் மீதுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட முடியுமா என்பதை பார்க்காமலேயே கூட அவர்களை வேலையைவிட்டு டிஸ்மிஸ் செய்ததைச் சரியென்று நியாயம் கற்பித்தார். இந்திய சர்க்காரின் தொழில் மந்திரி ஜகஜீவன்ராம் சென்னை வந்திருந்தபோது இவர்கள் வேலை நிறுத்தம் செய்ததாக லேபர் கமிஷனர் வாதம் செய்கிறார். ஆனல்

(3-ம் பக்கம் பார்க்க)

காட்டுங்கள் கருப்புக்கொடி

மக்களை மாளவைக்கும் உணவு மந்திரி

கே. எம். முன்ஷி

சென்னை வருகின்றார்!

உண்ண உணவு கேட்டால் மரத்தை நடச்சொல்லும்

மதிநுக மந்திரி முன்ஷி சென்னை வருகின்றார்!!

ஆணவத்தோடு வருகின்ற அவர்

சென்னையில் 31-1-51 புதனும்

1-2-51 வியாழனும் தங்குகின்றார்

திராவிடர்களே, கண்யத்துடன்

காட்டுங்கள் கருப்புக்கொடி!

எங்கள் சொத்தானலும் நாங்கள் அனுபவிக்கவில்லையே?

குடியரசு தினத்தன்று எழும்பூர் தென்னிந்திய ரயில் நிலயங்களில் 'ரயில்வே உங்கள் சொத்து' என்று அச்சடித்தக் காகிதங்கள் வழங்கப்பட்டனவாம். இதைக்கண்ணுற்ற திராவிடர்கள் 'எங்கள் சொத்தானலும்நாங்கள் அனுபவிக்கவில்லையே! என்று திராவிடர்கள் சொல்வதை அரசாங்கம் உணர்கிறதா? என்று நாம் கேட்கிறோம்.

மாலைமணி

சென்னை 29—1—51 திங்கட்கிழமை

காங்கிரஸ் தலைவரின் மொழி வெறி

நம் நாட்டிலே, எவரெவர் ஆதிக்கம் வகித்தனரோ, எவரெவர் நம் நாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கினரோ, அவர்களெல்லாம் தங்கள் தங்கள் மொழியைத்தான் இந்நாட்டில் முதலில் புகுத்தி, தங்களுடைய ஆதிக்கப் பிடிப்பை இந்நாட்டில் இறுக்குகிறார்கள்.

இவ்வாறுதான் தமிழ்நாட்டில் சமஸ்கிருதம், தெலுங்கு, உர்தூ, ஆங்கிலம் முதலிய மொழிகள் தலைதூக்கின. இந்த மொழிக்காரர்கள் இந்நாட்டைத் தங்கள் ஆதிக்கத்திறகுள் அடககிவைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன்தான் தங்கள் மொழியை முதலில் இங்கு புகுததினார்கள்.

இன்று நம் நாடு குடியரசு நாடு எனப்படுகிறது. எவரையும் எவரும் ஆதிக்கம் செய்வதில்லை என்று கூறப்படுகிறது, ஆனால், பழைய நாட்டாதிக்கப் பேர்வழிகளின் செயல் முறையையே இன்று வடநாட்டார் கைக்கொள்ளவும், அந்த முறைக்கு இங்குள்ள ஆட்சியாளர்கள் இடங்கொடுக்கவுமான நிலைமை ஏற்பட்டிருப்பதைக் காணும்போது, உண்மையிலேயே தென்னாட்டை அடிமைப்படுத்தி வைத்திருக்க, இந்த வடநாட்டார் தந்திரமான முறையில் செய்யும் சூழ்ச்சியின் முதற்படியே இந்தி மொழியை இங்குக் கொண்டுவந்து புகுத்துவது என்று நன்கு தெரிகிறது.

இந்தி மொழியை இந்த நாட்டில் பரப்ப ஏராளமான பணச் செலவு செய்யப்படுகிறது, அரசாங்கத்தின் ஆதரவு இருக்கிறது. இப்படி அரசாங்கம் அதிகார முறையிலும் பணத்தை விரயமாக்கியும் இந்தியைப் பரப்பி வருவதன் கருத்தென்ன? தென்னாட்டை வடவரிடத்தில் அடகு வைத்து, தென்னாட்டு மக்களை அடிமைப்படுத்துவது தவிர வேறு ஒன்றும் இருக்க முடியாதல்லவா?

அதற்கேற்ப, அகில இந்திய காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்கும் தாண்டன் என்பவர் இந்திய மொழிகள் அனைத்திற்குமாக இப்போதுள்ள லிபிகளை ஒழித்துவிட்டு, தேவநாகரி லிபியையே வைத்துக்கொள்வதுதான் சிறந்த வழியாகும் என்று நாகபுரியில் பேசியிருக்கிறார்.

ஆகவே, அவர் கருத்துப்படி, இன்று இந்நாட்டிலுள்ள மொழிகளை ஒழித்துவிட்டு, இந்தியையே பரப்பிவிட அவர் சதித் திட்டம் வகுக்கிறார் என்பது புலனாகிறது.

லிபிகளை ஒழிப்பதென்றால் அம்மொழியை ஒழிப்பதென்பதுதான் ஆகும். அதிலும் தமிழ் மொழியைப் பொருத்தமட்டில் லிபியை ஒழிப்பதென்பது தமிழ் மொழியைக் கொல்வது என்றுதான் பொருள்.

இதை நன்கறிந்த மொழி வெறி பிடித்த தாண்டன் லிபிகளை ஒழித்துவிட்டு எல்லா மொழிகளுக்கும் ஒரே லிபி எனும் பாட்டைப் பாடத் துவங்கியிருக்கிறார்.

இந்த மொழி வெறிப் புத்தியை யெல்லாம் வடநாட்டோடு வைத்துக்கொள்ளுமாறு தோழர் தாண்டனுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

தமிழகத்திலே தமிழ் சரிவர அறியாத சில விபீடணர்கள், தமிழ் சரிவர வளராத முன்பே கல்வி சரியாக பரவாத முன்பே இந்திக்கு ஆதரவு காட்டவும், இந்தியைப் பரப்ப முன் வரவும், சமஸ்கிருதத்தைப் பரப்ப முயற்சிக்கவும் இவற்றிற்காகத் தங்கள் அதிகாரத்தையும், செல்வாக்கையும் பயன்படுத்தவுமான வேலைகளில் இறங்கிவிட்டிருக்கிறார்கள்.

சமஸ்கிருதமோ, இந்தியோ அன்றி வேறெம்மொழியோ, தமிழைக் குலைக்கும் முறையில் இங்குத் தலைக்காட்டினால், தமிழர்கள் உறங்கிக்கொண்டிருப்பார்கள் என்று கருதிவிட வேண்டாம். மொழிக்காக உயிரையும் கொடுக்க வல்லவர்கள் என்பதைத் தாண்டன் போன்ற மொழி வெறியர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

கலெக்டர் கமிட்டியின் கண் துடைப்பு வேலை

முன்னைவிட மோசமான நிலையில் நெசவாளர் வாழ்வு

1-2-51 முதல் மீண்டும் சாத்வீக மறியல்

தலைவர்களின் கூட்டறிக்கை

சேலம், ஜன. 28—

சேலம் கைத்தறி நெசவாளர்களின் செயல் கமிட்டிக்கும் கலெக்டர் நிவாரண செயல் கமிட்டிக்கும் சென்ற 16-1-51 தேதியிலிருந்து தொடர்ந்து நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாய் 17-1-51 தேதி காலை கலெக்டர் கமிட்டியார் எங்களுக்களித்த வாக்குறுதியின்படி 26-1-51-ந் தேதிக்குள் இந்நகரில் இம்மாத நூலும், மிகவும் அவதிப்படுகிற நெசவாளர்களுக்கு நூல் கார்டு 1 க்கு 2½ வீதம் பஞ்சப்படியும் விநியோகிக்கத் தக்க ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும் இந்த ஜில்லாவில் நூல் விநியோகம் மாதாமாதம் ஒவ்வொரு நெசவுக்கும் குறிப்பிட்ட அளவு நூல்தவறாமல் விநியோகிக்கத் தக்க நிரந்தர ஏற்பாடுகள் 16-1-51 தேதியிலிருந்து 1 மாதத்திற்குள் பூர்த்திசெய்யப்படவேண்டும். இந்த இரு நிபந்தனைகளும் இரு தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதின் பேரில்தான் கலெக்டர் கமிட்டியார் தங்கள் வேலை தொடங்குவதற்கு வசதியளிப்பதற்காக நாங்கள் நடத்தி வந்த சாத்வீக மறியலைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க நம்முடைய கமிட்டி ஒப்புக்கொண்டது. ஆனால் நேற்று வரை அதாவது 26-1-51 தேதி முடிய கலெக்டர் கமிட்டியார் நமக்களித்த வாக்குறுதிபடி இம்மாத நூல் விநியோகத்தைப்பற்றியும் பஞ்சப்படி விநியோகம்பற்றியும் எந்தவித திட்டமான அறிகுறியும் ஏற்படவில்லையாகையினாலும், அவர்களிடமிருந்து இதுவரை நமக்குக்கிடைத்துள்ள பதில்கள் எல்லாம், வெறும் கண் துடைப்பு முறையிலேயும், காலம் கடத்தும் முறையிலேயும் உள்ளதே தவிர, நம்முடைய அவசர தேவைகளை உணர்ந்து பரிகாரம் கிடைக்கும் முறையிலில்லை என்று திடமாக நம்புகிறோம். சென்ற முறை நாம் போராட்டம் துவங்கிய போதிருந்ததைவிட மிக மிக மோசமான நிலையில் தங்கள் வாழ்நாளைத் தள்ள வேண்டிய மிக மிகப் பரிதாபகரமான நிலைமைக்கு நெசவாளர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைக்கு சர்க்காரும், ஸ்தல அதிகாரிகளின் அசிரத்தையுமே முழுக்க முழுக்கப் பொறுப்பு என்று நாங்கள் மனப்பூர்வமாக நம்புவதால் நம்முடைய இந்தக் கேவலமான நிலையைத் தீர்த்துக்கொள்ள நமக்கிருக்கும் ஒரே வழியாகிய சாத்வீக மறியல் நேரடி நடவடிக்கைப் போராட்டத்தை மீண்டும் 1-2-51 ந் தேதி வியாழன் முதல் சேலம் கலெக்டர் ஆபீஸ் முன் நடத்துவது என்று 26-1-51ந் தேதி இரவு கூடிய கைத்தறி நெசவாளர்களின் செயல் கமிட்டியார் ஒருமனதாக முடிவுசெய்துள்ளார்கள்.

மறியலுக்கு முதல் நாள் அதாவது 31-1-51 ந் தேதி புதன்கிழமை நெசவாளர்களின் ஊர்வலமும், அன்று மாலை போஸ்மைதானத்தில் பொதுக்கூட்டமும் நடைபெறும். நெசவாளர்களின் இந்த சாத்வீகப் போராட்டத்தின்போது சேலம் நகரப் பொதுமக்கள் தங்களின் முழு ஆதரவையும் தந்து எங்கள் கோரிக்கைகள் நிறைவேறத் துணைபுரிய வேண்டுமென்று சேலம் கைத்தறி நெசவாளர்களின் செயல் கமிட்டியின் சார்பில் மிகப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

கே. கே. பூர்ணையன்
அ. சித்தையன்

மதுவிலக்கு நடைபெறும் அழகு

சாராயம் வேண்டிய அளவு கிடைக்கிறது

சென்னை, ஜன. 28—

சென்னையில் கண்ணப்ப கிராமணி என்பவர் சாராயபுட்டி வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்டார், கோர்ட்டில் நேற்று அவர் மீது வழக்கு நடந்தபோது. "உனக்குச் சாராயம் எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டபோது, "தாராளமாகக் கிடைக்கிறது. ஒரு புட்டி மூன்றரை ரூபாய்தான்" என்று அவர் கூறினார் அவருக்கு நீதிபதி ஒரு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

எனினும், அரசாங்கத்தால் கள்ளச் சாராயங்களைத் தடை செய்ய முடியவில்லை. அவர் சாராயம் வாங்கி வந்த இடத்தைக் கண்டுபிடித்து அடக்கப் போலீசார் கவலை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இந்த அழகில் மதுவிலக்குக் கென்று தனிச் போலீஸ்படை, அதற்கு வேறு தனித் செலவு என்றெல்லாம் அரசாங்கம் செலவு செய்துகொண்டிருப்பதில் குறைவில்லை. மதுவிலக்குச் சட்ட மீறுதல் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கிறது என்பது நீதிமன்ற வழக்குகளிலிருந்து நன்கு விளங்குகிறது.

அப்புறப்படுத்தப்பட்டார்

—o—

எச்சரிக்கை செய்து விடுதலை செய்யப்பட்டார்

—(:o:)—

உங்கள் பணத்தையே சுரண்டிக்கொண்டு உங்களைக் கேலி செய்கிறது!

சென்னை, ஜன. 26—

பெரியார் அவர்கள் மறியல் செய்தபோது கைதுசெய்து அவரைத்தன் வீட்டில் விட்டு வணக்கம் சொல்லித் திரும்பினர் போலீஸ் அதிகாரிகள்.

'விடுதலை'

ஸ்ரீ ஈ. வே. ராமசாமி நாயக்கர் தலைமையில் திராவிடக் கழகத்தைச் சேர்ந்த 5 பேர் நேற்று மாலை சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலுள்ள ஆரியபவன் ஹோட்டல் முன்பாக மறியல் செய்ய ஆரம்பித்தனர்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் அவர்களைப் போலீஸார் வந்து அப்புறப்படுத்தினர்.

நாயக்கர் சிந்தாதிரிப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் செல்லப்பட்டார். பின்னர் அரைமணி நேரம் கழித்து அவருடைய வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டு எச்சரிக்கைச்செய்து விடுதலை செய்யப்பட்டார். (தினமணி)

பாருங்கள் திராவிட நாட்டில் திராவிடர் பணத்தையே கொள்ளை அடித்துக் கொண்டிருக்கும் செய்தித்தாள் நம்மைக் கேலிசெய்வதை.

மாணவ இலக்கிய மன்றம்

பெரம்பலூர்:—19-1-51 பிற்பகல் 5 மணிக்குப் புலவர் தோழர் ஔவை சு. துரைசாமி அவர்கள் தலைமையில் விழாத் துவங்கியது.

பள்ளித் தலைமை ஆசிரியர் அனைவரையும் வரவேற்ற பின்னர் விழா தலைவர் தமது சொற்பொழிவில் "இளமையின் வளமை" என்ற தலைப்பில் தமிழ்ச் சிறப்பு, தமிழர் நாகரீகம், தமிழர் முன்னேறுதற்குறிய வழிகள் முதலியவற்றை விளக்கி ஒன்றரை மணி நேரம் பேசினார்.

பின்னர் தமிழிசை இசைக்க நன்றிகூறலுடன் விழா இனிது நிறைவேறியது.

பிரிட்டிஷ்கண்காட்சிசாலையில் புத்தர் சிலை

சென்ற 12 ஆண்டுகளாக எங்கேயோ ஒரு மூலையில் புறக்கணிக்கப்பட்டுக் கிடந்த சலவைக்கல் புத்தர் சிலை பிரிட்டிஷ் கண்காட்சிசாலையில் பிரதான ஹாலின் நடுவில் பிரதானமாக வைக்கப்படவிருக்கிறது.

நிற்கும் நிலையிலுள்ள இந்த சிலை 1938-ல் சீன சர்க்காரால் நட்பின் அறிகுறியாக பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு அளிக்கப்பட்டது இது ஸுயி காலத்திய சிலையாக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

புதையுண்டு உயிருடன் எழுந்திருப்பதில் தோல்வி

சென்னை, ஜன. 28—

ஆலந்தூரில் சகஜானந்த ஹடயோகி தன்னைப் பூமியில் புதைக்கச் சொல்லி 37-30மணிக்குப் பிறகு தோண்டி எடுக்கச் சொன்னார். தோண்டிப் பார்த்ததில் மரணமடைந்துவிட்டார். இதற்குமுன் இதேமாதிரி பலதடவை செய்துள்ளார் எனச் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த தடவை மரணமடைவானேன் என்று பகுத்தறிவு வாதிகள் கேட்கின்றனர்.

சென்னை இருதாரத்தடை சட்டத்துக்கு எதிர்ப்பு

ஜனவரி, 26—

மன்னார்கோட்டை ஜமீந்தார்மீது இருதாரத்தடைச் சட்டப்படிவழக்குத் தொடர்ந்துள்ளதை எதிர்த்து இந்தியக் குடியரசு சட்டப்படி செல்லாதென வழக்குத் தொடர்ந்துள்ளார்.

கோதுமை வேண்டாம்

1949-ல் பாகிஸ்தான் 6,00,000 டன் கோதுமை கொடுப்பதாகச் சொன்னதை இந்திய அரசாங்கம் வேண்டாமெனக் கூறிவிட்டதாம். ஏனென்றால் தகாத விலை கூறிற்றாம்.

முதலாளிகளின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு எவ்வித வேலைநிறுத்தமும் நடைபெறவில்லை யென்று தொழிலாளிகள் கூறுகிறார்கள்.

பிறகு, லேபர் டிபார்ட்மெண்ட் காரியதரிசிக்கு விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டது. சுமார் 3 மாத காலமாக அதற்கு ஒரு பதிலும் இல்லை. அதன் பிறகு இவ்விஷயத்தில் தாங்கள் தலையிடுவதற்கு அவசியமே இல்லை என்று பதில் வந்தது. இந்த பதிலும் எவ்வித விசாரணையுமின்றிக் கொடுக்கப்பட்டது.

தொழிற் சங்க வேலைகளுக்காகப் பழிவாங்கப்பட்ட இத்தொழிலாளிகள் தங்களுக்கு நியாயம் கிடைப்பதற்காக எவ்வளவு தூரம் சட்டபூர்வமாக முயன்றிருக்கிறார்கள் என்பதையே இது காட்டுகிறது. அதேசமயத்தில் சர்க்கார் அதிகாரிகள் எவ்வாறு மானேஜ்மெண்டுக்குச் சாதகமாக நடந்துவருகிறார்கள் என்பதையும் இது காட்டுகிறது. ஆகவே, இதன் காரணமாக மானேஜ்மெண்டிடமிருந்தோ, கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டிடமிருந்தோ தங்களுக்கு நியாயம் கிடைக்காது என்ற எண்ணம் தொழிலாளிகளிடம் பலப்படவே செய்துள்ளது. ஆனால் இப்பொழுது கூட தொழிலாளிகளுக்கு நியாயம் வழங்கப்பட முடியுமென்றும், அவர்களை மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள முடியுமென்றும் நான் நம்புகிறேன்.

பொங்கல் விழா

வேலூர்:—21-1-51 ல் தி. மு. க, சார்பாக பொங்கல் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. முதல் நாள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மற்றும் பலரும், இரண்டாம் நாள் கருத்தோவியன், சத்தியவாணிமுத்து அவர்களும் பொங்கல் விழாவைப்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

மக்கள் மதியற்றவர்களா?

—(—o)—

பாடம் கற்பிக்கும் நாள் நெருங்கிவிட்டது

—(ஃ)—

புளுகுமணியின் பகற்கனவு

தஞ்சை, ஜன. 26—

"ஆச்சாரியார் திருவையாறு போகும்போது பள்ளி அக்கிரகாரத்தில் ஒரு சிறு கூட்டம் கருப்புக் கொடியுடன் காணப்பட்டனர்" என்று எழுதியுள்ளது.

ஆனால் அதே புளுகுமணி, ஆச்சாரியார் சொன்னதை வெளியிட்டுள்ளது. 'இந்தக் கோஷ்டியார் தங்கள் அபிப்பிராயத்தைமிக்க அமைதியான முறையில் தெரிவித்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன்'. கதரன்பர்களே இப்பொழுது தெரிந்துகொள்ளுங்கள் காலித்தனம் செய்பவர் யார் என்பதை.

சகித்துக்கொள்ளுங்கள்

சென்னை, ஜன. 26—

கஷ்டங்களை சகித்துக்கொள்ளுங்கள் என்றும், இந்த ஆண்டு பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்பட சட்டம் வகுத்துள்ளோம் என்றும் இதன் மூலம் கிராமங்கள் சிறிய ஸ்தல ஸ்தாபன குடியரசாக விளங்க முடியுமென்றும், இதற்காக நிலவரியிலிருந்து 12½ ஒதுக்கப்படும் என்றும் அகில இந்திய ரேடியோவில் குமாரசாமிராஜா பேசினார்.

இனி நடப்பவை

சேலூர்:—தி. மு. க பொதுக்கூட்டம் 29—1—51 அன்று நடைபெறும். அதுபோது அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி அவர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்.

* * *

அன்னியூர் (விழுப்புரம் வட்டம்) ஷை யூரில் 11-2-51 ஞாயிறு மாலை 3 மணிக்குபெருமாள்கோவில் முன் 'முன்னாள் முதலமைச்சரும்' உழவர் தலைவருமான தோழர் ஓ. பி இராமசாமியார் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

* * *

ஐக்கிய வைத்திய சங்கம்:—4-2-51 ஞாயிறன்று கும்பகோணம் போர்டார் டவுன்ஹாலில் நடக்கும் ஆண்டுவிழாவிற்கு வி. நாடிமுத்து பிள்ளை தலைமையில் தோழர்கள் வேதாத்னம் எம். எல். ஏ. விழாவைத் துவக்கி வைப்பார்கள். ஆர். சுப்ரமண்யம், கந்தசாமி மூப்பனார், ஜி. எஸ். ரெத்தினசபாபதி செட்டியார், டாக்டர் வரதராஜுலுநாயுடு சேலம் முதலியவர்கள் கலந்துகொள்வார்கள்.

* * *

சென்னை அச்சுக்கூடத் தொழிலாளர் சங்கம்:—29-1-51 திங்கள் மாலை 6 மணிக்கு நேபியர் பார்க்கில் தோழர் கே. முருகேசன் அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெறும், அதுபோது தோழர்கள் ஏ. ராமசாமி, வி. ராதாகிருஷ்ணன், டி. எம். ராமசாமி, என். ராமமூர்த்தி, முனுசாமி முதலியவர்கள் பேசுவார்கள்.

மத்திய அரசாங்க உணவு அமைச்சர் முன்ஷி

31-1-51-ல்சென்னைவருகிறார்

சென்னை, ஜன. 29—

மத்திய அரசாங்க உணவு இலாக்கா அமைச்சராகிய கே. எம். முன்ஷி இம்மாதம் 31-ந் தேதியன்று சென்னை வருகிறார். இங்கு நடைபெறும் பசிபிக் மீன் பிடிப்போர் மாநாட்டைத் துவக்கி வைப்பார். பிப்ரவரி 2-ந் தேதி இவர் டில்லி திரும்புகிறார்.

தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

31—1—51

நேகம்

தோழர் இரா. நெடுஞ்செழியன்.

1—2—51

மடத்தூர்

தோழர்கள் ஈ. வே. கி. சம்பத் ஆ. திராவிடமணி.

4—2—51

திருச்சி-ஜெயங்கொண்டான்

தோழியர்கள் சத்தியவாணிமுத்து, இராமாமிருதத்தம்மையார்.

தடைவிதித்த நாடகங்களை நடத்தவேண்டும்

தெலிங்கானா தோழர்களையும் பாலுவையும் தூக்கிலிடாதே

சென்னை மாவட்ட தி. மு. க. நிர்வாக கமிட்டிக் கூட்ட தீர்மானம்

24-1-51 புதன் மாலை 6 மணிக்கு ஷை கமிட்டிக் கூட்டம் தங்கசாலை 202-ம் எண் கட்டிடத்தில் நடைபெற்றது. சென்னை மாவட்டத்தின் பல கிளை வட்டங்களிலிருந்து 35 உறுப்பினர்கள் வந்திருந்தனர். முந்திய நிர்வாகக் கூட்டத்தின் நடவடிக்கைகள் செயலாளரால் படிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டபின், கழகத்திற்குச் சொந்தமான ஒலி பெருக்கி, சென்னையில் பொதுக்கூட்டங்கள், மாவட்ட சந்தா விபரம், சென்னை வருகின்ற வடநாட்டு மந்திரிகளுக்குக் கருப்புக்கொடி, கழக நடைமுதல் செலவுகளுக்கான பொருள், நெசவாளர் துயரம், பிரசாரக்குழு, தடை செய்யப்பட்ட நாடகங்களை நடத்துதல், ஆகிய விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டபின் கீழ்க்கண்டபடி தீர்மானங்கள் நிறைவேறின:

கழகத்திற்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ள ஒலிபெருக்கியைத் தான் இனி சென்னையில் நடைபெறுகின்ற நமது இயக்கக் கூட்டங்களுக்கு உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்பதோடு அதற்காக, பொதுக்கூட்டங்களுக்கும், திருமண முதலிய காரியங்களுக்கும் சிறிது வித்தியாசத்துடன் குறைந்த கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு, வெளியூர்களுக்குத் தனி கட்டணம் என்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

வருகிற பிப்ரவரி இறுதிக்குள் "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்ற நாடகத்தைச் சென்னை மாவட்டத்தின் சார்பில் நடத்தவேண்டுமென்றும், சென்னை மாவட்டத்தில் தி. மு. கழக பிரசார அவசியம் நேரிடும்போது மாவட்டக் கழக வேண்டுகோளுக்கிணங்க, மாவட்டக் கழக செயலாளர் குறிப்பிடும் சொற்பொழிவாளர்களைக்கொண்டு பொதுக்கூட்டங்கள் நடத்துமாறு கிளைக் கழகத்தாரைக் கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானங்கள் நிறைவேறின.

மற்றும் தி. மு. கழக நிலையத்தில் பிரசாரப் பயிற்சிக் கூட்டம் ஒன்று பிப்ரவரி முதல்வாரம் முதல் ஒவ்வொரு செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமைகளில் மாலை 6-30 மணி முதல் 8 மணிவரை தோழர் இரா. நெடுஞ்செழியன், தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் கே. ஏ. மதியழகன், காஞ்சிமணிமொழியார், என். வி. நடராஜன், அறிஞர் சி. என். ஏ. ஆகியோரைக் கொண்டு நடத்துவிப்பதெனவும், ஷை பயிற்சிக் கூட்டத்தை நடத்துவதற்கான பொறுப்பை துணைச் செயலாளர் தோழர் ஏ. கே. சாமி. அவர்களிடம் ஒப்படைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் சென்னை மாவட்ட தி. மு. கழக செலவினங்களுக்குப் பொருள் தேவைப்படுவதால், நடிப்புக் கலையரசர் கே. ஆர். ராமசாமி, தோழர் மு கருணாநிதி ஆகியோர்களைக்கொண்டு நாடகம் நடத்திப் பொருளுதவி செய்யுமாறு அவர்களைக் கேட்டுக்கொள்வதெனவும், சேலம் கைத்தறி நெசவாளர்கள் தங்களது போராட்டத்தில் வெற்றி பெற்றதற்கு அவர்களைப் பாராட்டியும், அவர்களுக்குத் தேவையான நூல் சப்ளையை உடனே செய்யுமாறு அரசாங்கத்தை வற்புறுத்தியும் தீர்மானங்கள் நிறைவேறின.

ஐதராபாத் சமஸ்தானத்தில் 12 தெலிங்கானா விவசாயத் தலைவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதையொட்டி அவர்கள் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்வதற்குசட்ட நுணுக்கங்களைக் காரணமாக்கி அனுமதி மறுக்கப்பட்டதானது, புதிய அரசியல் திட்டத்திற்கே விரோதமானது என்பதோடு அத்தலைவர்களை எவ்விதநிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள ரிசர்வ் போலீஸ் சிப்பந்தியான மதுரைதோழர் பாலுஅவர்களுக்குக் கருணை காட்டி அவரது தண்டனையை ரத்து செய்துவிடுமாறு அரசியலாருக்கு வேண்டுகோள் விடுத்தும் ஓர் தீர்மானம் நிறைவேறியது.

சமீபத்தில் வார்சாவில் நடந்த சமாதான மாநாட்டின் தீர்மானங்களை இக்கமிட்டி ஆதரிப்பதுடன் அதையொட்டிய கருத்துடன் சென்ற 23, 24 டிசம்பரில் காஞ்சி, தி. மு. க. மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சமாதான தீர்மானத்தை வரவேற்றுப் பாராட்டியும் மேலும் ஓர் தீர்மானம் நிறைவேறியது.

ஷை தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டபின் செயலாளரால் நன்றி கூறப்பட்டு இரவு 9-15 மணிக்கு கமிட்டி இனிது கலைந்தது.

குறிப்பு:—பிரசாரப் பயிற்சிக் கூட்டத்தில் பங்குகொண்டு, பயின்று நல்ல சொற்பொழிவாளர்களாக ஆக வேண்டும் என்ற ஆர்வம் உள்ள சென்னைத் தோழர்கள் பிப்ரவரி 6-ம் தேதிக்குள் தங்கள் பெயர்களை, முழு விலாசத்துடன், தோழர் ஏ. கே. சாமி, உதவிச் செயலாளர் சென்னை மாவட்ட தி.மு. கழகம் 202 தங்கசாலை, சென்னைஎன்ற முகவரிக்கு எழுதியனுப்பக் கோறப்படுகிறார்கள்.

விற்பனைக்கு தயாராகிவிட்டது!

புத்தாண்டின் புதிய காலண்டர்கள்

அண்ணா—நெடுஞ்செழியன்—கருணாநிதி ஆகியோரின் படங்களைத் தனித்தனியே கொண்டது—"மாலைமணி" மலரில் வந்த புகைப்படங்கள் "ஆர்ட்" பேப்பரில் அச்சிடப்பட்டவை. தத்தம் இல்லத்திலும் பார்வைக்குரியதாகப் பத்திரப்படுத்த முந்துங்கள்.

காலண்டர் ஒன்றின் விலை அணா 4

ஒன்று வேண்டுவோர் 0—5—0 தபால்தலை யனுப்பிப் பெறலாம்—விற்பனையாளர்கட்கு 25% கமிஷன் உண்டு. வி. பி. பி.யில் அனுப்ப முடியாது-முன்பணம் அனுப்பிப்பெறுக.

விவரங்கட்கு

ஆரூர்பண்ணை சென்னை-14

தி.மு. கழகத்திற்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் அண்ணா அவர்களும் அடிக்கடி தெரிவித்துக்கொண்டு வந்திருக்கிறார். தி. மு கழகம், திராவிடம் மற்றவர்களால் சுரண்டப்பட்டு வருவதைக்கண்டு ஏற்பட்ட எழுச்சியே மத்திய ஆட்சி மந்திரிகள் எவர் வந்தாலும் அவருக்குக் கருப்புக்கொடி வரவேற்பு அளித்துத் தமது அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றது. இனியும் அம்முறையிலே கருப்புக்கொடி வரவேற்பு மத்திய மந்திரிகளுக்குத் தொடர்ந்து இருக்கும்.

வெற்றி-நன்றி!

தஞ்சை மாவட்டத்தின் திராவிட முன்னேற்றக் கழக வீரர்களே! தஞ்சையில் ஆச்சாரியாருக்குக் காட்டிய கருப்புக்கொடி நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கில் வந்திருந்து ஆர்வம் தளராது-அமைதி குலையாது-கட்டுப்பாட்டை மீறாது-அதே சமயம் கடமையை மறவாது "வீண் பேச்சுக்காரர் நாங்களல்ல, வீரர்கள் நாங்கள்" என்பதை விளங்க வைத்துத் தலைமையேற்ற எங்களையும் கௌரவித்து-ஆச்சாரியார் விழிகளிலே கருப்புக்கொடி தெரியக்காட்டி-திருவையாற்று திறப்பு விழா 'மொழி'யிலே நம்மைப்பற்றி அவர் பேசுகிற அளவுக்கு வெற்றியை விதைத்திட்ட உங்களனைவரையும் பாராட்டி மாவட்டத்தின் சார்பாக எங்களின் நன்றியைக் கூறிக்கொள்கிறோம்.

மு. கருணாநிதி
என். எஸ். இளங்கோ
ஏ. கே. வேலன்

நாட்டு வைத்தியர்கள் பதிவு செயற் கமிட்டி

இக்கமிட்டியின் இரண்டாவது கூட்டம் 3—2—51 சனி மாலை 6-மணிக்கு கும்பகோணம்கும்பேஸ்வரர் வடக்கு வீதியிலுள்ள பி.பாக்யம்பிள்ளை அவர்கள் கட்டிடத்தில் கூடும்.

இக்கூட்டத்தில் வைத்தியர்கள் ரிஜிஸ்ட்டர் சம்பந்தமாக அரசாங்கத்திடமிருந்து வந்துள்ள பதிலையும், கட்டிய பணத்தை வாபீஸ் பெறுவது சம்பந்தமாக "ஸெண்ட்ரல் போர்டு ஆப் இண்டியன் மெடிஸனிடமிருந்து" வந்துள்ள பதிலையும் பற்றி ஆலோசிக்கப்படும்.

பெரியார் ஈ. வெ. ரா., அண்ணாத்துரை

ஹிந்துமத, கிருஸ்துமத, காங்கிரஸ் முதலிய எல்லா பெரியார்களின் இனாமல் போட்டோ மோதிரக் கற்கள், டாலர்கள் இதர பேன்சி கற்கள்

நவரத்தினங்கள், பேன்சி ஆபரணங்கள், முத்து மாலைகள் கிடைக்கும். ஒரேதடவை 3 கல் ஆர்டருக்கு வி. பி. செலவு இல்லை. ஏஜண்டுகள் தேவை! கமிஷன் 25% உண்டு.

PRABU GEMS Co.
2, Govindappa Naick St.,
MADRAS-1

எழுத்தாளர்களுக்கேற்ற சந்தர்ப்பம்!

நீங்கள், எழுதும் கதை, கட்டுரை கவிதை, நாடகம் முதலியவைகளைப் பிரசுரிக்கப்படும். விபரமறிய 2 முக்காலணா ஸ்டாம்புடன் எழுதவும்.

'முத்தமிழ்குழு'
ஊத்துக்குளிரோட் திருப்பூர்(S.I.Ry.)

நன்றி அறிவிப்பு

சேலம், ஜன. 26—

எனக்கு பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய நண்பர்களுக்கு என் நன்றி.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

சந்தா விவரம்

1	ஆண்டு	ரூ. 18—0—0
6	திங்கள்	ரூ. 9—0—0
3	திங்கள்	ரூ. 4—8—0

தனிப்பிரதி முக்காலணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்குச் சலுகையுண்டு. விவரங்களுக்கு எழுதவும்.

"மாலைமணி" பதிப்பகம்
மண்ணடி-சென்னை-1

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.